SIVANMANAI



# திருவாசகம்

**பதிகம்: திருவெண்பா**

**திருப்பெருந்துறையில் அருளியது**

*** * * * ***

## திருச்சிற்றம்பலம்

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

*** * * * ***

வெய்ய வினைஇரண்டும் வெந்துஅகல மெய்உருகிப்
பொய்யும் பொடியாகாது என்செய்கேன்–செய்ய
திருவார் பெருந்துறையான் தேன்உந்து செந்தீ
மருவாது இருந்தேன் மனத்து.

ஆர்க்கோ அரற்றுகோ ஆடுகோ பாடுகோ
பார்க்கோ பரம்பரனே என்செய்கேன்–தீர்ப்பரிய
ஆனந்த மால்ஏற்றும் அத்தன் பெருந்துறையான்
தான்என்பர் ஆர்ஒருவர் தாழ்ந்து.

செய்த பிழைஅறியேன் சேவடியே கைதொழுதே
உய்யும் வகையின் உயிர்ப்பு அறியேன்–வையத்து
இருந்து உறையுள் வேல்மடுத்துஎன் சிந்தனைக்கே கோத்தான்
பெருந்துறையில் மேய பிரான்.

THIRUVASAGAM GROUP
Scan this QR code using the WhatsApp Camera to join this group

முன்னை வினைஇரண்டும் வேர்அறுத்து முன்நின்றான்
பின்னைப் பிறப்புஅறுக்கும் பேராளன்–தென்னன்
பெருந்துறையில் மேய பெருங்கருணை யாளன்
வரும்துயரம் தீர்க்கும் மருந்து.

அறையோ அறிவார்க்கு அனைத்துலகும் ஈன்ற

மறையோனும் மாலும் மால்கொள்ளும்–இறையோன்
பெருந்துறையுள் மேய பெருமான் பிரியாது
இருந்துறையும் என்னெஞ்சத்து இன்று.

பித்துஎன்னை ஏற்றும் பிறப்புஅறுக்கும் பேச்சுஅரிதாம்
மத்தமே ஆக்கும் வந்து என்மனத்தை–அத்தன்
பெருந்துறையான் ஆட்கொண்டு பேரருளால் நோக்கும்
மருந்துஇறவாப் பேரின்பம் வந்து.

வாரா வழிஅருளி வந்துஎனக்கு மாறின்றி
ஆரா அமுதாய் அமைந்தன்றே–சீரார்
திருத்தென் பெருந்துறையான் என்சிந்தை மேய
ஒருத்தன் பெருக்கும் ஒளி.

யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்
யாவர்க்கும் கீழாம் அடியேனை–யாவரும்
பெற்றுஅறியா இன்பத்துள் வைத்தாய்க்கு என்எம்பெருமான்
மற்றுஅறியேன் செய்யும் வகை.

மூவரும் முப்பத்து மூவரும் மற்றுஒழிந்த
தேவரும் காணாச் சிவபெருமான்–மாஏறி
வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க
மெய்யகத்தே இன்பம் மிகும்.

இருந்துஎன்னை ஆண்டான் இணைஅடியே சிந்தித்து
இருந்து இரந்துகொள் நெஞ்சே எல்லாம்–தரும்காண்
பெருந்துறையில் மேய பெருங் கருணையாளன்
மருந்துஉருவாய் என்மனத்தே வந்து.

இன்பம் பெருக்கி இருள்அகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வு அறுத்துச் சோதியாய்–அன்புஅமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊர்ஆகக் கொண்டான் உவந்து.

**திருச்சிற்றம்பலம்**

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

* * * * *